**<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>**

**O.S.NO.27/2015 E.P.NO. R.C.O.P.**

**Deposition of Witness: PW -3**

| | | |
|---|---|---|
| **Name** | : | *சிவராமன்* |
| **Father's Name /W/o** | : | *எம்.கே. சுந்தரம்* |
| **Religion** | : | *இந்து* |
| **Caste** | : | *முதலியார்* |
| **Calling** | : | *விவசாயி* |
| **Address** | : | *தக்கோலம்* |

**Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 13.09.2019**

**<u>Chief Examination</u>:**

***<u>முதல் விசாரணை</u>***

***நான் தக்கோலத்தில் வசித்து வருகிறேன். வாதியை தெரியும் அவர் மாங்காட்டுச்சேரியில் வசித்து வருகிறார். தயானந்த முதலியாரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 கிரைய ஒப்பந்த ஆவணத்தில் உள்ள 4 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். மேற்படி ஒப்பந்தம் தயானந்த முதலியார் வாதிக்கு எழுதிக்கொடுத்த நில விக்கிரைய ஒப்பந்தம் ஆகும். 1.6.1978 ல் மேற்படி ஒப்பந்தம் எழுதப்பட்டது. விக்கிரைய தொகை 10500 ரூபாய் ஆகும். மொத்த விஸ்தீரணம் 2.99 சென்ட்டுகளாகும். அன்றைய தேதி முன்பணமாக ரூபாய் 2000 கொடுக்கப்பட்டது. மேற்படி இடத்தில் தயானந்த முதலியாரையும் சேர்த்து 7 நபர்கள் இருந்தார்கள். தயானந்த முதலியார் வா.சா.ஆ 1 ஆவணத்தில் கையொப்பம் இடுவதை நான் பார்த்தேன். நான் சாட்சி கையொப்பம் அந்த***

*ஆவணத்தில் இடுவதையும் அவர் பார்த்தார். வா.சா.ஆ 1 ஆவணத்தில் கடைசி பக்கத்தில் உள்ள 2வது செல் குறிப்பில் உள்ள முதலாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை 15.07.1979 ல் நான் போட்டேன். மேற்படி செல் குறிப்பில் ஒப்பந்த தேதியிலே 2000 ரூபாய் பெற்றுக்கொள்ளப்பட்டு அதே வருடம் டிசம்பர் மாத்தில் ரூபாய் 5000 பெற்றுக்கொள்ளப்பட்டு மீதி உள்ள கிரைய தொகை 3500 ஏற்கனவே ரூபாய் 3000 பெற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் 500 ரூபாய் பெறப்பட்டு வாதிக்கேட்கும் போது கிரையப் பத்திரம் எழுதிக்கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டு செல் எழுதப்பட்டது. அன்றைய தேதியில் சொத்து வாதிக்கு ஒப்படைக்கப்பட்டதாகவும் எழுதப்பட்டது. அந்தச் செல்லில் தயானந்த முதலியார் கையொப்பம் இடுவதை நான் பார்த்தேன் நான் சாட்சி கையொப்பம் இடுவதையும் அவர் பார்த்தார். தக்கோலத்தை சேர்ந்த சோமசுந்தர முதலியார் என்பவர் தான் செல்லை எழுதினார். அவரை தயானந்த முதலியார் தான் அழைத்து வந்தார்.*

*(பிரதிவாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)*